முருகப்பெருமான் துணை

**மகான் மெய்ப்பொருள் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.01.2022, வியாழக்கிழமை

1. ஆறுமுக அரங்கனே வருக
ஆற்றல் மிக்க அண்ணலே வருக
மாறுதலை செய்ய வேண்டி
மகானாய் அவதாரம் புரிந்த
2. புரிந்தநல் ஆறுமுக ஞானியே
பூவுலகில் உன் அவதார தினமாம்
**(இன்று 13.01.2022 ஓங்காரக்குடிலாசான் அவதரித்த நாள்)**
தெரியவே பிலவ சிலை திங்கள்
தெரிவிக்க இருபான்நவ திகதி குருவாரம்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 29ம் நாள், 13.01.2022 வியாழக்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசியை
வழங்குவேன் மெய்ப்பொருள் நாயனாரும்
பாரதம் முழுக்க நன்மை அடைய
பகருவேன் இந்தவித நன்னாளில்
4. நாளதும் உலக மகா சக்திகள்
**(இன்று 13.01.2022 முருகப்பெருமான் முதல் அகத்தீசன், திருஞானசம்பந்தர், மகான் திருமூலதேவர், மகான் மாணிக்கவாசகர், உள்பட நவகோடி சித்தர்களும் குடிலில் தங்கி அருளாசி வழங்குகிறார்கள்)**
ஞானிகள் படை அனைத்தும்
காலமதில் பிரணவக்குடிலில்
கந்தவேலன் ஆசிபட வந்துமே
5. வந்துமே அரங்கனுக்கு வரங்கள்
வாரி வழங்கும் மகா சூட்சுமம்
சிந்தைபட நடக்க இருக்க
சித்திகள் வேண்டி காத்திருக்கும் மக்கள்
6. மக்கள் எல்லாம் இதுநாளில் சென்று
மகான் அரங்கனை பணிந்து
ஆக்கமுடன் சிவதீட்சைதனை
அடைந்து அன்னமிட உதவி
7. உதவியே அருளாசி பெறவே
உண்மைபட வரங்களாகவே
பூதலத்தில் சூட்சும சக்திகளும்
புண்ணிய பலமும் அடைந்து உயர்வர்
8. உயர்வான அரங்க ஞானியின்
உத்தம சேவைகள் தானும்
தயவான மேலவர் துணைபட
தனித்துவம் இன்னும் அடைய இருக்க

9. இருக்கவே அரங்கன் பேரில்
எங்கெல்லாம் கிளைச்சங்கமாக
கருத்தாக தருமம் நடக்கிறதோ
கட்டாயம் அங்கெல்லாம் இன்று மாற்றம்

10. மாற்றமுடன் வளர்ச்சி தேற்றம்
மகத்துவம் சகல வரமும்
ஆற்றலாகக் கிட்டி இனிதே
அரங்கர் மயம் ஆகும் எங்கும்

11. எங்கும் கருணை தயவு கூடி
எல்லா வகையும் மாற்றம்
ஓங்காரம்பட இனிதே காணும்
ஓதிவந்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–